

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



மின்னிதழ் ஜூன் 2025



## செயலர் பக்கம்

அருள்பணி. சு. மரிய சூசை



அன்பு உறவுகளே!

இதயம் என்பது இமயமளவு அர்த்தம் பொதிந்த ஒரு சொல். இதயம் உணர்வுகளின் கருவறை, அன்பின் அச்சாரம், இரக்கத்தின் ஊற்று என்று எத்தனையோ உன்னதமான உருவகங்களை இதயத்தோடு இணைத்துச் சொல்வது நாம் அறிந்ததே. மனித இதயங்களைவிட மலையளவு மகத்துவம் நிறைந்தது இறைவனின் இதயம். அந்த ஈடு இணையில்லா இறைமகன் இயேசுவின் தூய்மைமிகு இதயத்தை இம்மாதத்தில் நாம் கொண்டாடுகிறோம்.

“நீ எதைத் தேடுகிறாயோ அது உன்னைத் தேடுகிறது” என்கிறார் ரூமி. ஆம், கடவுளைத் தேடுகிற மனிதனை கடவுள் தேடுகிறார். இறைவனுக்காக ஏங்கும் மனித இதயத்திற்காக இறைவனின் இதயம் ஏங்கித் தவிக்கிறது என்பது வெள்ளிடைமலை. விவிலியம் முழுவதும் நாம் பார்க்கும் பேருண்மை இதுவே. இறைவனின் இதயம் மனிதரை நாடுகிறது, தேடுகிறது, விரும்புகிறது. இறைவனின் இதயம் துடிப்பதும் இகத்தில் உள்ள மாந்தருக்காகவே. நாம் எந்நிலையில் இருந்தாலும் நம்மைத் தேடுவதும், நமக்காகத் துடிப்பதும் அவரின் இதயம் மட்டுமே. இறைவனின் இதயம் மிகவும் விசாலமானது. அங்கு அனைவருக்கும் இடமுண்டு. அது எவரையும் எப்போதும் புறக்கணிக்காது. அது அனைவரையும் அன்புசெய்யும். அது எல்லாரையும் அரவணைக்கும்.

இறைவனின் இதயத்தோடு நம்முடைய இதயம் கோர்க்கப்பட வேண்டும். காந்தத்தோடு சேரும் இரும்புத் துண்டு காந்தத் தன்மை அடைவது போன்று இறைவனின் இதயத்தோடு தன்னை இணைத்துக் கொள்ளும் நமது இதயமும் இறைவனின் இதயத்தின் தன்மையை ஒத்ததாக மாறும். இயேசுவே, எம் இதயமும் உம் இதயம் போல் ஆகட்டும் என்று செபிப்பதோடு நில்லாமல், இயேசுவின் இதயம் போல நம்முடைய இதயம் மாறிட இயேசுவின் இதயத்தோடு நம் இதயத்தையும் இணைத்திடுவோம். இயேசுவின் இதயத்தை அணிசெய்த பண்புகளால் நம் இதயத்தையும் அணி செய்வோம்.

# யூபிலி ஆண்டு அறிவோம்

## #9
## 2ஆம் வத்திக்கான் சங்கம்

✶ கத்தோலிக்க திரு அவையில் நடந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஒரு நிகழ்வு.

✶ இச்சங்கம் 11/10/1962 முதல் 8/12/1965 வரை நடைபெற்றது. இதில் 16 ஏடுகள் வெளியிடப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமானவை 4 கொள்கைத் திரட்டுகள். அவை முறையே

"Dei Verbum" - "இறை வெளிப்பாடு" - கடவுள் எதற்காக எவ்வாறு தம்மை வெளிப்படுத்துகிறார்.

"Sacrosanctum Concilium" - "திருவழிபாடு" - தத்தம் தாய்மொழிகளில் இறை வழிபாடு போன்றவற்றின் தொகுப்பு.

"Lumen Gentium" - "திரு அவை" - துறவத்தார் & பொது நிலையினர் இருவருமே நற்செய்தி அறிவிப்பு பணியின் பொறுப்பாளர்கள்.

"Gaudium et Spes" - "இன்றைய உலகில் திரு அவை" - திரு அவை நவீன உலகத்தோடு கொள்ளும் தொடர்பு,பிற சமயத்துடன் தொடர்பு போன்றவை குறித்து விளக்கி சொல்லும் தொகுப்பு.



✶ நவீன கத்தோலிக்க திரு அவையை வடிவமைத்த பெருமை இந்த சங்கத்திற்கு உண்டு.

# #10
## 2024
## இறைவேண்டலின் ஆண்டு

- இறைவேண்டலே நம்முடைய நம்பிக்கை வாழ்வின் உயிர்மூச்சு.
- இறைவேண்டல் என்பது, நாம் இறைவனிடம் உரையாடி, அவரோடு நமக்குள்ள உறவை வளர்த்துக் கொள்வதாகும்.
- 2024 ஆம் ஆண்டை இறைவேண்டலின் ஆண்டாக அறிவித்ததற்கான நோக்கங்கள் பின்வருமாறு:
  - தற்போதுள்ள உலகச் சூழலில், தனியாகவும் மற்றும் குழுமமாகவும் நாம் செபிப்பதன் முக்கியத்துவத்தை மீண்டும் நாம் கண்டுபிடிப்பதற்கு
  - கடவுளுடன் ஆழமான ஆன்மீகத் தொடர்பை ஊக்குவிப்பதற்கு
  - பதற்றமும், வேகமும்,விரக்தியும் நிறைந்த இந்த உலகில் நம்முடைய நம்பிக்கையின்மையை நீக்கி நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கு



- இவ்வாறு நம்முடைய செப வாழ்வை புதுப்பிப்பதன் மூலம் கடவுள் நம்மீது கொண்டுள்ள அன்பின் ஆழத்தை உணர்ந்து, அவரிடம் நாம் சரணடைந்து, நிலைவாழ்வுக்குரிய நம் பயணத்தை வலுப்படுத்துவோம்.

# பங்குகளில் விடுமுறை விவிலியப் பள்ளி வகுப்புகள் சந்திப்பு

இவ்வாண்டு மே மாதம் 'மகிழ்வோம் புகழ்வோம்' என்னும் தலைப்பில் விடுமுறை விவிலியப் பள்ளி வகுப்புகள் நம் மறைமாவட்டப் பங்குகளிலும் கிளைப் பங்குகளிலும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. அதற்கான பயிற்சிப் பாசறை மார்ச் மாதத்தின் கடைசி இரு வாரங்களில் மணப்பாறை, திருச்சி ஆகிய இடங்களில் நடைபெற்றது. அருளாளர் கார்லோ அக்குதிஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றின் ஒளி ஒலிப் பதிவு 9 நாள்களாகப் பிரித்து பணிக்குழுவின் யூ-டியூப் சேனலில் பகிரப்பட்டது.












மே 1 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரையிலும் பங்குகளில் சிறப்பாக நடைபெற்ற ஏடீளு வகுப்புகள் பணிக்குழுச் செயலர், வேதியர்கள் ஆகியோரால் பார்வையிடப்பட்டன. இவர்கள் பின்வரும் பங்குகளைப் பார்வையிட்டு மாணாக்கரையும் ஆசிரியர்களையும் உற்சாகப்படுத்தினர். பெரிய மிளகுபாறை, காமராஜ் நகர், கல்லுக்குழி, அம்மாப்பேட்டை, கீரனூர், நாஞ்சூர், மாத்தூர், மலம்பட்டி, துப்பாக்கித் தொழிற்சாலை, துரைசாமிபுரம், ஆவாரம்பட்டி, மலையடிப்பட்டி, உடையாப்பட்டி, திருக்காவலூர், பெரிய அணைக்கரைப்பட்டி, பெரிய குளத்துப்பட்டி, என்.பூலாம்பட்டி, கருங்குளம், எருசலேம். அனைத்து பங்குகளிலும் பங்குப் பணியாளர்களும் விடுமுறை விவிலியப் பள்ளி ஆசிரியர்களும் இந்த ஆண்டுக்கான விடுமுறை விவிலிய வகுப்புகளை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். அனைவருக்கும் எமது மனமார்ந்த பாராட்டும் நன்றியும்.






பெரிய குளத்துப்பட்டி




துப்பாக்கித் தொழிற்சாலை



வேலப்புடையான்பட்டி
(மலம்பட்டி பங்கு)



அம்மாப்பேட்டை



எருசலேம்



கருங்குளம்



திருக்காவலூர்



ஆவாரம்பட்டி




மலம்பட்டி



பூலாம்பட்டி

VBS










# VBS





# CLC

## ஊடகக் குழுவினருக்கான கூட்டம்

திருவிவிலியம், மறைக்கல்வி, திருவழிபாடு ஆகியவை குறித்த பல்வேறு தகவல்களை ஊடக வழியில் இறைமக்களுக்கும் மறைக்கல்வி மாணாக்கருக்கும் கொண்டு சேர்ப்பதற்காக உருவாக்கப்பட்டதே கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழுவின் ஊடகக் குழுவாகும். தன்னார்வ வேதியர்களும் ஆர்வமுள்ள சில மறைக்கல்வி ஆசிரியர்களும் இணைந்து இப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களுக்கான ஆண்டுத் திட்டமிடல் கூட்டம் 21.05.2025 புதன்கிழமை அன்று மாலை 5.30 மணிக்கு நல்லாயன் நிலையத்தில் நடைபெற்றது. அன்றாட புனிதர், விவிலியப் புதிர், ஞாயிறு திருவழிபாட்டுக் குறிப்புகள், யூபிலி ஆண்டு குறித்த செய்திகள், மாதாந்திர பணிக்குழுவின் மின்னிதழ் ஆகியவை தற்போது இந்த ஊடகக் குழுவால் முன்னெடுத்துச் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றிற்காக செயலரால் பாராட்டும் நன்றியும் தெரிவிக்கப்பட்டது. பணிக்குழுவுக்காக இருக்கும் வலையொளி, முகநூல், இணையதளம் ஆகியவற்றில் இடம்பெறும் செய்திகளைக் குறித்து இக்கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும் அடுத்த ஒரு வருடத்திற்கான செயல்பாடுகள் குறித்த திட்டங்களும் நெறிமுறைகளும் விவாதிக்கப்பட்டன.





# தன்னார்வ வேதியர்களின் பங்குத் தொடர்பாளர்களுக்கான கூட்டம்

24.05.2025 சனிக்கிழமை அன்று மாலை 5.00 மணிக்கு நல்லாயன் நிலையத்தில் தன்னார்வ வேதியர்களின் பங்குத் தொடர்பாளர்களுக்கான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. எதிர்வரும் 2025 ஜீன் மாதம் முதல் 2026 மே மாதம் வரை நடைபெற உள்ள செயல்பாடுகளுக்கான திட்டங்கள், பரிந்துரைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. பங்குகளிலும் மறைமாவட்டத்திலும் இன்னும் கூடுதலான ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் தங்கள் திறமைக்கும் வாய்ப்புக்கும் ஏற்றவாறு தன்னார்வ வேதியர்கள் செயல்படுமாறு செயலர் அறிவுறுத்தினார்.





# இரண்டு படங்களுக்கு இடையே உள்ள 6 வித்தியாசங்களைக் கண்டுபிடித்து மகிழுங்கள்

